## அறிவிப்பு - Notification
### மாவட்ட நலச்சங்கம், சிவகங்கை மாவட்டம்
### மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை

சிவகங்கை மாவட்டத்தில் புதிதாக துவக்கப்பட்ட, சங்கராபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் (புதுவயல் வட்டாரம்), மானாமதுரை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் தேசிய நலவாழ்வு குழுமத்தின் (NHM) கீழ் **ஒப்பந்த அடிப்படையிலான** கீழ்கண்ட பணியிடங்களில் பணிபுரிவதற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 19.**07.2025 முதல் 31.07.2025** வரை வரவேற்கப்படுகின்றன.

| வ.எண் | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகுதி | வயது வரம்பு | மாத ஊதியம் |
|---|---|---|---|---|---|
| **1.** | மருந்தாளுநர் | 1 ( சங்கராபுரம் PHC)<br>1 ( மானாமதுரை UPHC) | 12 ஆம் வகுப்பு அறிவியல் பிரிவில் தேர்ச்சி. அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனத்தில் D.Pharm அல்லது B.Pharm Course முடித்திருக்க வேண்டும். தமிழ்நாடு பார்மசி கவுன்சிலில் பதிவு செய்திருக்க வேண்டும். | 40 வயதிற்குள் | ரூ.15000/- |
| **2.** | ஆய்வக நுட்புநர் நிலை-3 (Lab Technician Gr- III) | 1 ( சங்கராபுரம் PHC)<br>1 ( மானாமதுரை UPHC )<br>5 (சிவகங்கை மாவட்டம்) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மருத்துவக் கல்வி இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனத்தில் மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப படிப்பில் (ஒரு வருட காலம்) தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். நல்ல உடல் திறன், நல்ல கண் பார்வை மற்றும் வெளிப்புற வேலை செய்யும் திறன் ஆகியவற்றை கொண்டிருக்கவேண்டும். | 40 வயதிற்குள் | ரூ.13000/- |
| **3.** | செவிலியர் - RCH | 2 ( சங்கராபுரம் PHC)<br>3 ( மானாமதுரை UPHC ) | செவிலியர் பட்டயப்படிப்பு (DGNM) அல்லது இளங்கலை செவிலியர் பட்டம் (B.Sc Nursing) மற்றும், தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும். | 50 வயதிற்குள் | ரூ.18000/- |
| | செவிலியர் - NCD | 1 ( சங்கராபுரம் PHC)<br>1 ( மானாமதுரை UPHC ) | | | |
| | செவிலியர் (RCH, NCD, RBSK, NBSU & MMU) | 94 (சிவகங்கை மாவட்டம்) | | | |
| **4.** | பல்நோக்கு சுகாதார பணியாளர் / சுகாதார ஆய்வாளர் நிலை-II (MPHW-HI Gr-II) | 1 ( சங்கராபுரம் PHC) | 12 ஆம் வகுப்பு (உயிரியல் அல்லது தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடம்) தேர்ச்சி. இரண்டு வருட பல்நோக்கு சுகாதார பணியாளர், சுகாதார ஆய்வாளர், துப்புரவு ஆய்வாளர் கல்வித் தகுதி (அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், காந்திகிராம் கிராமிய நிறுவனம் உள்ளிட்ட நிகர்நிலை பல்கலைக்கழகங்களில் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையால் வழங்கப்பட்ட சான்றிதழ்) பெற்றிருக்க வேண்டும். | 40 வயதிற்குள் | ரூ.14000/- |
| **5.** | பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் (Multi Purpose Hospital Worker) | 2 ( சங்கராபுரம் PHC)<br>2 ( மானாமதுரை UPHC) | குறைந்தபட்ச கல்வித் தகுதி 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மற்றும் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். | | ரூ.8500/- |

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

செயலாளர், மாவட்ட நலவாழ்வுச் சங்கம் / மாவட்ட சுகாதார அலுவலர்,
மாவட்ட சுகாதார அலுவலகம்,
முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலக மேல்தளம்,
சிவகங்கை மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம்,
சிவகங்கை.
தொலைபேசி எண் 04575-240524.

**குறிப்பு:**

1. விண்ணப்பப் படிவம் சிவகங்கை மாவட்ட வலைதளம் http:/sivaganga.nic.in வேலைவாய்ப்புப் பிரிவில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் தகுந்த ஆவண நகல்களுடன் மேலே குறிப்பிட்டுள்ள மாவட்ட நலவாழ்வுச் சங்க அலுவலக முகவரிக்கு 31.07.2025 தேதிக்குள் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
3. இந்த பதவி முற்றிலும் தற்காலிகமானது. எந்தவொரு காலத்திலும் பணிநிரந்தரம் செய்யப்படமாட்டாது.
4. காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டது.

தலைவர்,
மாவட்ட நலவாழ்வுச் சங்கம்/
மாவட்ட ஆட்சியர்,
சிவகங்கை.